மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 68, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

68—

சிறுதொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிதி உதவி

* ***35705***—டாக்டர் ஜெ. பரந்தாமன்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டு சிறுதோல் தொழில் கூட்டுறவுச் சங்கம் மேலும் வளர்ச்சியடைய அரசிடம் சிறப்புத் திட்டங்கள் இருக்கின்றனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தேசிய தோல் தொழில் வளர்ச்சித் திட்டத்தின் நிதியுதவியுடன் ரூ. 1,39.38 லட்சம் மதிப்பில் கூடுதல் இயந்திர சாதனங்களை பேரணாம்பட்டு சிறுதோல் தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் நிறுவி பலப்படுத்துவதற்குரிய கோரிக்கை தொழில் வணிக இயக்ககத்தின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத் தடையால் தோல் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ள இந்நிலையில், மாண்புமிகு பொற்கால முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த தோல் தொழில் நசிக்காமல் இருக்க பல உதவிகளைச் செய்துள்ளார்கள். உயிர்காக்கும் மாமருந்தாக விளங்கிக் கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு பேரணாம்பட்டு தொகுதிவாழ் மக்கள் சார்பாகவும், தொழிலாளர்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பேரணாம்பட்டு சிறுதொழில் தோல் கூட்டுறவுச் சங்கங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தொழில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நன்றி. ஆனால் இங்குள்ள கருவிகள் மிகப் பழமையானவை, அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன. மாவட்டத்தின்

1995 நவம்பர் 9]

பக்கத்தில் உள்ள ஊர்களில் தனியார்கள் அதிநவீன கருவிகளை வைத்துள்ளார்கள். எனவே அந்த அளவிற்கு முன்னேற்றம், லாபம் கிடைக்க வேண்டுமெனில் நவீன கருவிகள் அவசியம் தேவை. எனவே என்னென்ன புதிய கருவிகள் வாங்கப்பட உள்ளன? எவ்வளவு மதிப்பில்? எப்போது அவை நிறுவப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதொழில் தோல் நிறுவனத்தின் மூலம் நான்கு இடங்களை நாம் தேர்ந்தெடுத்து, கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துள்ளோம். அதிலே முதன் முதலாக ராணிப்பேட்டையை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தொழில் முதலீட்டுக் கழகத்திலே சொல்லியிருக்கிறார்கள். பேரணாம்பட்டிலுள்ள சிறுதோல் தொழில் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ராணிப்பேட்டையில் உள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகத் திட்டம், தேசிய தோல் வளர்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, ராணிப்பேட்டை திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளார்கள். ராணிப்பேட்டை திட்டம் வெற்றிகரமாக செயல்படுவதைக்கொண்டு, பிறகு பேரணாம்பட்டிலுள்ள சேவை தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் திட்டம் பரிசீலிக்கப்படும் என்று தேசிய தோல் வளர்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தோல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இங்கே வந்த பிறகு சுமார் 5,000-க்கும் மேற்பட்டோர் நேரடியாகப் பயனடைந்துள்ளார்கள். மேலும் பெண்கள் அதிக அளவில் பயன்பெற 'ட்ரைசம்'-க்கு ஒரு பயிற்சி மற்றும் தோல் பொருள்கள், தோல் தொழில்கள், தோல் ஆடைகள், தோல் கார்மென்ட்ஸ் 'பினிஷ்டு குட்ஸ்' என்ற அளவில் செயல்படக் கூடிய அளவிற்கு விரிவாக்கம் செய்யவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கட்டமாக ராணிப்பேட்டையை அவர்கள் அங்கீகரித்துள்ளார்கள். இரண்டாவது கட்டமாக பேரணாம்பட்டை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலை வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை உறுதியாகப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 69, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.